வளன் ஆயம்
தொழிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# சுதந்திர சுவாசம் தந்த பெண்கள்

**இரா. ராஜேஷ் குமார்**, பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர், அரசு கலைக் கல்லூரி, கரூர்-5

**முன்னுரை**

இன்று சுதந்திரமாக மக்கள் இருப்பதற்கு, எண்ணற்ற தியாகங்கள் அரங்கேற்றப்பட்டு உள்ளன. சும்மா வரவில்லை இந்த சுதந்திரம்...! எத்தனையோ ஆயிரக்கணக்கானோர் இந்திய விடுதலைக்காகவும், சமூக விடுதலைக்காகவும் போராடி உயிர்த் தியாகம் செய்து இந்த சுதந்திரத்தை இந்நாட்டுக்குப் பெற்றுத் தந்துள்ளனர் இந்தப் போராட்டத்தில் உயிர் தியாகம் செய்தது ஆண்கள் மட்டுமல்ல. பல்லாயிரக்கணக்கான பெண்களும்தான் ஆயினும் பலரது போராட்டம் வெளியே தெரியாமல் மறைந்து போய் விட்டது.

அதிலும் சுதந்திர போராட்டத்தில் ஈடுபட்ட தமிழக பெண்களின் பங்களிப்பு பலருக்குத் தெரியாமலேயே போனது. தமிழக வரலாற்றில் பெண்கள் அரசியலிலும், கல்வியிலும், ஆரம்பக் காலம் தொட்டே ஈடுபட்டு வந்தனர். சங்ககால பெண் புலவர்களான அவ்வையார், பொன்முடியாள் அரசவைப் புலவர்களாகவும், தூதுவர்களாகவும் செயல்பட்டு வந்தனர். பல்லவர், சோழர், பாண்டியர் கால அரசக் குடும்பத்தை சேர்ந்த பெண்கள், கல்வி கேள்விகளிலும், சமூகச் செயல்பாடுகளிலும் சிறப்புடன் திகழ்ந்தனர். விடுதலை வேட்கை 19ஆம் நூற்றாண்டுக்கு பின்னரே, தமிழ்நாட்டில் வீறு கொண்டு எழுந்தது. விடுதலை வேட்கை கொண்டு ஆங்கிலேயருக்கு எதிராக வீறு கொண்டு எழுந்த பெண்கள் பலர் உண்டு. இந்த வீரமங்கைகளில் ஒரு சிலரைக் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**வேலு நாச்சியார்**

ஆங்கிலேய ஆதிக்கத்துக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் இந்தியப் பெண்மணி என்ற பெருமை வேலுநாச்சியார் அவர்களையே சாரும். சிவகங்கை தலைநகரான காளையார்கோவிலில் இருந்த கிழக்கிந்திய கம்பெனியின்

படையை வேலுநாச்சியார் உக்கிரத்தோடு எதிர்ப்பதன் மூலம் தமிழக மகளிர் வீரத்தின் குறைந்தவர்கள் இல்லை என்பதை நிரூபித்தார் .

**கடலூர் அஞ்சலையம்மாள்**

இவர் 1890 ஆம் ஆண்டு கடலூாரில் உள்ள முதுநகரில் பிறந்தார். 1921ஆம் ஆண்டு காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கிய பொது இவரும் தம் பொதுவாழ்க்கையைத் தொடங்கினார். நீலன் சிலையை அகற்றும் போராட்டம் உட்பட பல போராட்டங்களில் பங்கு பெற்றுச் சிறைக்குச் சென்றார். வேலூர் சிறையில் இருந்த போது, கருவுற்ற நிலையில் இருந்த இவரை ஆங்கிலேய அரசு வெளியில் அனுப்பிவிட்டு, மகப்பேற்றிற்குப் பின் மீண்டும் சிறையில் அடைத்தது. நீலன் சிலையை அகற்றும் போராட்டத்தில் தனது 9 வயது மகளையும் ஈடுபடுத்தினார். இவருடன் இவர் மகளும் சிறைத்தண்டனை பெற்றார். காந்தியடிகள் சிறையில் வந்து பார்த்து, இவரின் மகள் அம்மாக்கண்ணுவை தன்னுடன் அழைத்து ச்சென்று வார்தாவில் உள்ள ஆசிரமத்தில் படிக்க வைத்து அவருக்கு லீலாவதி எனப் பெயரும் இட்டார். இவர் காந்தியடிகளால் “தென்னாட்டின் ஜான்சிராணி” என அழைக்கப்பட்டார்.

**அம்புஜத்தம்மாள்**

இவர் 1899ஆம் ஆண்டு பிறந்தார். இவர் அன்னை கஸ்துரிபாயின் எளிமையான தோற்றத்தினால் கவரப்பட்டு எளிமையாக வாழ்ந்தார். இவர் பாரதியாரின் பாடல்களைப் பாடி விடுதலை உணர்வை ஊட்டினார். இவர் “காந்தியடிகளால் தத்தெடுக்கப்பட்ட மகள்” என்று அழைக்கப்படுபவர். தன் தந்தையின் பெயரோடு காந்தியடிகளின் பெயரையும் இணைத்து “சீனிவாச காந்தி நிலையம்” என்ற தொண்டு நிறுவனத்தைத் தொடங்கினார். இவர் தம் எழுபதாண்டு நினைவாக, “நான் கண்ட பாரதம்” என்ற நூலை எழுதினார். 1964ஆம் ஆண்டு இவருக்கு “தாமரைத்திரு”(பத்மஸ்ரீ) விருது வழங்கப்பட்டது.

**ருக்மணி லட்சுமிபதி**

இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை மற்றும் இந்திய தேசிய காங்கிரஸை சேர்ந்த அரசியல்வாதி 1930 வேதாரண்யத்தில் நடந்த உப்பு சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டதற்காக ஓராண்டு சிறையிலடைக்கப்பட்டார். உப்பு சத்தியாகிரக இயக்கத்தில் சிறை சென்ற முதல் பெண் இவர் தான். இவர் சென்னை மாகாணச் சட்டமன்றத்தில்

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் உறுப்பினர் மற்றும் சென்னை மாகாணத்தின் முதல் பெண் அமைச்சர் ஆவார்.

**சொர்ணத்தம்மாள்**

மதுரை மாவட்ட சுதந்திர போராட்ட வீரர்கள் துணிச்சலில் சிகரமாகத் திகழ்ந்தனர். அவர்களுள் சொர்ணத்தம்மாள் அன்னிய துணிகளை மிதித்து, கடைகளின் முன் மறியல் செய்ததற்காகக் கைது செய்யப்பட்டார். 1942-ல் காந்தியடிகளின் வெள்ளையனே வெளியேறு இயக்கம் மூலம், அவரது வேண்டுகோளான "செய் அல்லது செத்து மடி" என்பதை உணர்வாகக் கொண்டு, மதுரை புறநகர் பகுதியில் தெருத் தெருவாக இறங்கி மக்களிடையே சுதந்திரத்தீயை மூட்டினார். ஒவ்வொரு நாளும் கைது செய்யப்பட்டு, சிறையில் வைக்கப்படுவதும் விடுவிக்கப்படுவதும் வாடிக்கையாக இருந்தது.

**என்.எம்.ஆர்.எஸ்.பர்வதவர்த்தினி**

மதுரையில் அதிகம் வாழும் சவுராஷ்டிரா சமூகத்தைச் சேர்ந்த சுப்ராமன் மனைவி பர்வதவர்த்தினி அம்மாள். சுதந்திர போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு சுப்ராமன் கைது செய்யப்பட்டுச் சிறைக்கு சென்றிருந்த நேரத்தில், கணவர் வழியில் பர்வதவர்த்தினி மதுக்கடை மறியலில் ஈடுபட்டு வந்தார். மறியல் செய்த பெண்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, கண்டன ஊர்வலம் நடத்தினார். இதற்காக அவர் கைது செய்யப்பட்டு ஆறு மாதம் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

**கே.பி.ஜானகியம்மாள்**

மதுரையைச் சேர்ந்த குருசாமியின் மனைவி ஜானகியம்மாள். நாடகங்கள் மூலம் சுதந்திர உணர்வை வெளிப்படுத்தினார். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தமிழகம் வந்தபோது, முத்துராமலிங்க தேவருடன் இணைந்து சுற்றுப்பயணம் செய்து விடுதலை உணர்வை ஊட்டினார். 1937-ல் ஆறு மாதம், 1941-ல் ஒன்பது மாதம் சிறை தண்டனை அனுபவித்தார். விடுதலை போராட்ட வீரருக்குரிய ஓய்வூதியத்தை நிராகரித்து இறுதி வரை தியாகவாழ்வு வாழ்ந்தார். மதுரையில் மட்டும் சுதந்திர வேட்கையைத் தூண்டிய பெண்மணிகளுள் குறிப்பிடத்தகுந்தவர்கள் சித்து பாக்கியலெட்சுமி, சீதாலெட்சுமி அம்மாள், தாயம்மாள், சீலக்காரம்மாள், விசாலாட்சி, திருக்கொண்டாலட்சுமி அம்மாள், முத்தம்மாள், பத்மாஸணியம்மாள், மதுரை மேலூாரை சேர்ந்த தமயந்தி அம்மாள்.

**மாணிக்கம்மாள்**

திருவாடானை திருவேகம்புத்துார் செல்லத்துரையின் மனைவி மாணிக்கம்மாள். 1942-ல் ஆகஸ்ட் புரட்சியில் பங்கு கொண்டதற்காக 5 மாத சிறைத்தண்டனை பெற்றார்.

**வேலம்மள்**

திருவாடானை கிழக்குத் தெருவைச் சேர்ந்த வேலம்மள் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்றதற்காக 2 ஆண்டு சிறைத்தண்டனை பெற்றார்.

**நீலா மெருன்னி**

ராமநாதபுரம் கீழ்அய்யக்குடியைச் சேர்ந்த நீலா மெருன்னி, 1941-ல் நடந்த தனிநபர் சத்தியாகிரகத்தில் பங்கேற்று 4 மாத சிறைத்தண்டனை அனுபவித்தார்.

**ராஜலெட்சுமி**

ராமநாதபுரம் தெற்கு வானக்காரத் தெருவைச் சேர்ந்த ராஜலெட்சுமி, கள்ளுக்கடை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு ஆறு மாத சிறைத்தண்டனை பெற்றார்.

**ஜெயலட்சுமி**

பரமக்குடி சூடியூரைச் சேர்ந்த ஜெயலட்சுமி தனது 20வது வயதில் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் ஈடுபட்டு ஆறு மாத சிறைத்தண்டனை பெற்றார்.

**முடிவுரை**

விடுதலைப்போரில் போராடிய பெண்களின் வரலாற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். ஏட்டிற்கு வராத எத்தனையோ பெண்கள் உள்ளனர். அவர்கள் தியாகம் இன்னும் வெளிஉலகிற்குத் தெரியவில்லை. இந்த விடுதலைப் போராளிகளின் தியாகம் வெளி வர வேண்டுமாயின், பெண்களின் பங்களிப்பு குறித்தான ஆய்வுகளும், நுால்களும் வெளிவர வேண்டும்.